வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.2188/ஆ5/2023, நாள். 13.02.2024

.....

பொருள் பள்ளிக் கல்வி – மன்ற செயல்பாடுகள் 2023–2024 – மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கான மன்ற செயல்பாடு போட்டிகள் 16.02.2024 அன்று நடைபெறுதல் – வட்டார அளவில் வெற்றி பெற்ற மாணவர்கள் கலந்துக் கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை
1. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் கடித ந.க.எண்.019528/எம் /இ1/2023, நாள். 26.07.2023
2. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.019528 /எம்/இ1/2023, நாள். .02.2024 (இவ்வலுவலகம் பெறப்பட்ட நாள். 07.02.2024)

.....

பார்வை 1–ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி, அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இவ்வாண்டு பள்ளி, வட்டாரம் மற்றும் மாவட்ட அளவிலான மன்ற போட்டிகள் நடத்துல் சார்ந்து வழிகாட்டி நெறிமுறைகள் வழங்கப்பட்டது. இதன்படி ஆகஸ்ட் – 2023 மற்றும் நவம்பர் – 2023 ஆகிய மாதங்களில் வட்டார அளவிலான போட்டிகள் நடைப்பெற்றது.

இந்நிலையில் தற்போது பிப்ரவரி – 2024ல் மாவட்ட அளவிலான மற்றும் மாநில அளவிலான மன்றப்போட்டிகள் மட்டும் அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 6 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு கீழ்காணும் அட்டவணைப்படி போட்டிகள் நடத்திட பார்வை 2–ல் காணும் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வட்டார அளவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள இயலும்.

| மாவட்ட அளவிலான மன்ற செயல்பாடு போட்டிகள் | | | |
|---|---|---|---|
| மன்றங்கள் | போட்டிகள் நடைபெறும் நாள் | இடம் | நேரம் |
| அனைத்து மன்றங்கள் (இலக்கிய மன்றம், வினாடி வினா மன்றம், சிறார் திரைப்படம் மற்றும் வானவில் மன்றம்) | 16.02.2024 (வெள்ளிக்கிழமை) | அரசு முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி, வேலூர். | காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை |

| மாநில அளவிலான மன்ற செயல்பாடு போட்டிகள் விவரம் | |
|---|---|
| மன்றங்கள் | நடைபெறும் நாட்கள் |
| வானவில் மன்றம் | 22.02.2024 , 23.02.2024, 24.02.2024 |
| இலக்கிய மன்றம் மற்றும் வினாடி வினா | 27.02.2024, 28.02.2024, 29.02.2024 |
| சிறார் திரைப்படம் திரையிடல் | 05.03.2024, 06.03.2024 , 07.03.2024 |

மாவட்ட அளவிலான போட்டிகளுக்கான வழிகாட்டுதல்கள், தலைப்புகள் மற்றும் கால அளவு போன்ற விவரங்கள் அனைத்து மன்றப் போட்டிகளுக்கு பின்வருமாறு வழங்கப்படுகிறது.

(I) இலக்கிய மன்றம்

| பிரிவு | மாவட்ட அளவில் |
|---|---|
| நிகழ்ச்சி நடைபெறும் முறை | தனிநபர் நிகழ்வு |
| நடத்தப்பட உள்ள போட்டிகளின் வகை | 1. பேச்சுப் போட்டி<br>2. கட்டுரை எழுதுதல்<br>3. கவிதை எழுதுதல்<br>கீழே குறிப்பிட்டுள்ள தலைப்புகளில் எதேனும் ஒரு தலைப்பை மாணவர்கள் தேர்ந்தெடுத்து, தனிநபர்களாக பங்கேற்க வேண்டும். |
| கருப்பொருள் | 1. <u>பேச்சுப் போட்டி</u><br>a. கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு<br>b. புத்தகங்கள் படிப்பதன் முக்கியத்துவம்<br>c. பண்புடைமை<br><br>2. <u>கட்டுரை எழுதல்</u><br>a. சமூகத்தில் சமூக ஊடகங்களின் தாக்கம்<br>b. மழைநீர் சேமிப்பின் அவசிய<br>c. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் பங்கு<br><br>3. <u>கவிதை எழுதுதல்</u><br>a. மரங்கள் பேசினால் காடழிப்பின் விளைவுகள்<br>b. நட்பு<br>c. இயற்கை |
| பரிந்துரைக்கப்படும் கால அளவு | 1. பேச்சுப் போட்டி (5-6 நிமிடம்)<br>2. கட்டுரை எழுதுதல் (45 நிமிடங்கள்)<br>3. கவிதை எழுதுதல் (60 நிமிடங்கள்) |
| பரிசு | மாவட்ட அளவில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்படும். |

(II) வினாடி வினா மன்றம்

| பிரிவு | மாவட்ட அளவில் |
|---|---|
| நிகழ்ச்சி நடைபெறும் முறை | தனிநபர் நிகழ்வு<br>1. 10 துரித கேள்விகள் (Rapid Fire Round) மூலம் சிறந்த 5 மாணவர்கள் தேர்வு செய்யப்படும் வரை அனைத்து மாணவர்களையும் சிறு சிறு குழுகளாகக் கொண்டு நாக் அவுட் (Knock–out) சுற்றுகளை நடத்தவும்.<br>2. தேர்தெடுக்கப்பட்ட 5 மாணவர்களுக்கு 20 துரித கேள்விகள் (Rapid Fire Round) மூலம் 2 சுற்றுகளாக நடத்தி 1 மாணவரை வெற்றியாளராக தேர்ந்தெடுக்க வேண்டும். |
| நடத்தப்பட உள்ள போட்டிகளின் வகை | துரித கேள்விகள் (Rapid Fire) |
| கருப்பொருள் | போட்டிக்கு முந்தைய ஒரு வாரத்தில் வெளிவந்த தேன்சிட்டு இதழ் மற்றும் பொது அறிவு நடப்பு நிகழ்வுகள் அடிப்படையில் வினாடி வினா |
| பரிசு | மாவட்ட அளவில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்படும். |

(III) சிறார் திரைப்படங்கள் திரையிடுதல்

| பிரிவு | மாவட்ட அளவில் |
|---|---|
| நிகழ்ச்சி நடைபெறும் முறை | தனிநபர் நிகழ்வு |
| நடத்தப்பட உள்ள போட்டிகளின் வகை | ஒவ்வொரு போட்டிகளுக்கு கீழே குறிப்பட்டுள்ள சுற்றுக்கள் நடத்தல் வேண்டும்.<br><br>1. <u>கதை விமர்சனம்</u><br>i. கதை சுருக்கம் எழுதுதல்<br>ii. திரைப்பட விமர்சனம்<br>iii. திரைப்படத்திற்கு வேறு முடிவு விவாதம்<br><br>2. <u>தனிநபர் நடப்பு நடைபெறதல்</u><br>i. பட சுருக்கத்தின் சிறு நாடகம்<br>ii. மௌன நாடகம் நடத்துதல்<br><br>3. <u>குறும்படம் தாயரித்தல்</u><br>i. படத்தின் சுவரொட்டி வடிவமைத்தல் – கதாபாத்திரங்கள், படத்தின் கரு, கதைக்களம், இடம், நிறம் போன்றவற்றைப் பயன்படுத்தி<br>ii. புகைப்படம் – கைபேசி அல்லது புகைப்படக் கருவி வாயிலாக<br>iii. திரைபடத்தின் ஒரு காட்சியை இயக்குதல் |
| கருப்பொருள் | இவ்வாண்டு பள்ளிகளில் திரையிடப்பட்ட திரைபடங்களை போட்டிகளுக்கான அடிப்படையாக பயன்படுத்தப்படலாம்.<br><br>1. E.T. The Extra Terrestrial<br>2. Nila / நிலா<br>3. ஹருண் – அருண்<br>4. THE JUNGLE GAND<br>5. The Kid<br>6. Bunt<br>7. ஹரிதாஸ் |

| | |
|---|---|
| பரிந்துரைக்கப்படும் கால அளவு | 1. **கதை விமர்சனம்**<br>a. கதை சுருக்கம் எழுதுதல் – 60 நிமிடங்கள்<br>b. திரைப்பட விமர்சனம் – 30 நிமிடங்கள்<br>c. திரைபடத்திற்கு வேறு முடிவு விவாதம் – 5-7 நிமிடங்கள்<br><br>2. **தனிநபர் நடப்பு நடைபெறுதல்**<br>a. பட சுருக்கத்தின் சிறுநாடகம் – 5-7 நிமிடங்கள்<br>b. மௌன நாடகம் நடத்துதல் – 5-7 நிமிடங்கள்<br><br>c. **குறும்படம் தயாரிததல்**<br>a. படத்தின் சுவரொட்டி வடிவமைத்தல் – 60 நிமிடங்கள்<br>b. புகைப்படம் – 30 நிமிடங்கள்<br>c. திரைபடத்தின் ஒரு காட்சியை இயக்குதல் – 10 நிமிடங்கள் |
| பரிசு | மாவட்ட அளவில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்படும். |

(IV) வானவில் மன்றம்

| பிரிவு | மாவட்ட அளவில் |
|---|---|
| நிகழ்ச்சி நடைபெறும் முறை | தனிநபர் நிகழ்வு |
| நடத்தப்பட உள்ள போட்டிகளின் வகை | 1. அறிவியல் கண்காட்சி<br>2. அறிவியல் செயல்திட்டம்<br>3. அறிவியல் நாடகம்<br><br>• குறைந்த விலை, விலை மதிபற்ற பொருட்கள் பயன்படுத்தி பொருள் தயாரிக்க வேண்டும்.<br>• மாணவர்கள் மட்டுமே பொருளை தயாரிக்க வேண்டும்<br>• மாணவர்கள் அதனை விளக்க தெரிந்து இருக்க வேண்டும்<br><br>கீழே குறிபிட்டுள்ள தலைப்புகளில் ஏதேனம் ஒரு தலைப்பை மாணவர்கள் தேர்ந்தெடுத்து, தனிநபர்களாக பங்கேற் வேண்டும் |

| | |
|---|---|
| கருப்பொருள் | 1. **அறிவியல் கண்காட்சி**<br>a. சுற்றுச்சூழல் மாசுபாடு<br>b. சூரிய குடும்பம்<br>c. உலக வெப்பமயமாதல்<br>d. ஆரோக்கியமான வாழ்க்கை முறை<br>2. **அறிவியல் செயல்திட்டம் (செயல்திட்ட மாதிரிகள் –திடக்கழிவு மேலாண்மை)**<br>3. **அறிவியல் நாடகம்**<br>a. செயற்கை நுண்ணறிவு<br>b. கணிதத்தின் அதிசய உலகம் |
| பரிந்துரைக்கப்படும் கால அளவு | ஒரு மாணவருக்கு 5 நிமிடம் பொருள் மற்றும் அதுகுறித்த அறிவியலை விளக்க 2 நிமிடம் கேள்வி / பதில் |
| பரிசு | மாவட்ட அளவில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்படும். |

வட்டார அளவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும். மாவட்ட அளவில் நடைபெறும் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்கள் மாநில அளவிலான மன்றப் போட்டிகளில் கலந்துகொள்வர். மாநில அளவிலான போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்கள் மன்றவாரியாக தலா 25 மாணவர்கள் வெறிநாடுகளுக்கு கல்வி சுற்றுலா அழைத்து செல்லப்படுவர். மாநில அளவிலான போட்டிகள் நடத்துவதற்கான வழிக்காட்டுதல்கள் பின்னர் தெரிவிக்கப்படும்.

எனவே, வட்டார அளவில் நடைபெற்ற போட்டிகளில் 6 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் வெற்றி பெற்ற மாணவர்கள் (வட்டார அளவில் வெற்றி பெற்ற மாணவர்கள் பட்டியல் இணைக்கப்பட்டள்ளது) மேற்காணும் படி நடைபெறவுள்ள மாவட்ட அளவிலான மன்றப் போட்டிகளில் தவறாமல் கலந்து கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – வட்டார அளவில் வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள்,
அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல் –

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர், (தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம் (தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு தெரிவிக்கும் பொருட்டு அனுப்பப்படுகிறது.
3. மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலைக் கல்வி) வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
4. மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, காந்திநகர், வேலூர் மாவட்டம்.
5. தலைமையாசிரியர், அரசு முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி வேலூர், (போதிய வசதி செய்து தர தெரிவிக்கப்படுகிறது)

(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)